## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### முல்லைப் பெரியாறு அணையை முடக்கி கேரள அரசு புதிய அணை கட்டவுள்ளதால் தமிழக விவசாயிகள் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முல்லைப் பெரியாறு அணை அருகே புதிய அணை கட்டும் நடவடிக்கையை கேரள அரசு எடுத்து வருவதால், தமிழக விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து, அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. ஆர். சாமி ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. விடியல் எஸ். சேகர், திரு. கோவை தங்கம் ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம், திரு. தி. வேல்முருகன் ஆகியோரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், திரு. சி. கோவிந்தசாமி, திரு. வே. மாரிமுத்து, திரு. ப. டில்லி பாபு, திரு. ஞா. ஜாண் ஜோசப், திருமதி ரா. லீமா றோஸ், திருமதி ஜி. லதா ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. சு. குணசேகரன், திருமதி பி. பத்மாவதி, திரு. எஸ். இராசசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. தி. இராமசாமி ஆகியோரும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக திரு. து. ரவிக்குமார் அவர்களும், விதிகள் 55 மற்றும் 56-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன்.

இதுகுறித்து, அறிவிப்புக் கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் அ.இ.அ.தி.மு.க. (குறுக்கீடு) அந்த வரிசையில் தொடங்கவா? (குறுக்கீடு) முதலில் பெரிய கட்சி சார்பில்தான் பேசுவார்கள், பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்தான் பேச வேண்டும். (குறுக்கீடு) இப்பொழுது இந்த வரிசைதான். முதலில் அ.இ.அ.தி.மு.க. சார்பாக யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) திரு. ஓ. பன்னீர்செல்வம்.

[2009 ஜூலை 3

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை சம்மபந்தமாக நம்முடைய சட்டமன்றத்தில் ஏற்கெனவே பல முறை விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றது.

இந்தப் பிரச்சினையில் ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும் இது தீராத பிரச்சினையாக உள்ள நிலையில் இப்போது புதிய பிரச்சினையாக, அங்கே ஒரு புதிய அணைக்கட்டு கட்டுவதற்குக் கேரள அரசு தொடர்ந்து பூர்வாங்க முயற்சிகளை மேற்கொண்டிருப்பதனால் மதுரை, தேனி, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் ஆகிய 6 மாவட்ட மக்கள் பெரிதும் கவலைப்படக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தவரையில், 1886 ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தப்படி 1895 ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டினுடைய இராணுவப் பொறியாளர்கள் அந்த அணையை மிகவும் பலமுள்ள அணையாகக் கட்டி முடித்து, மொழிவாரி மாநிலம் பிரிக்கப்பட்டு, அந்த அணை தற்போது கேரளப் பகுதியில் இருந்தாலும் 999 ஆண்டு காலக் குத்தகையின் அடிப்படையில் அந்த ஒப்பந்தம் இன்றைக்கும் நடைமுறையில் இருக்கின்றது.

1979-ல் அந்த அணையில் சில பிரச்சினைகள் எழுந்ததன் காரணமாக, அந்த அணையைப் பழுதுபார்க்கின்ற பணியைத் தமிழக அரசு ஏற்று, அந்த அணையினுடைய பழுது முழுவதுமாக நீக்கப்பட்டு, அந்த அணை பலமுள்ளதாக இருக்கின்றது என்ற பிறகு மத்திய நீர்வளக் குழுமமும் வந்து ஆய்ந்து, ஆராய்ந்துப் பார்த்து, குழுமத்தினுடைய பரிந்துரையின்படி, மத்திய நீர் வள ஆணையமும்—1979 ஆம் ஆண்டு நீர் மட்டம் 152 அடியில் இருந்து 136 அடிக்குக் குறைக்கப்பட்டது—மீண்டும் 142' அடி அளவுக்குத் தேக்கிக்கொள்ளலாம் என்று பரிந்துரை செய்ததற்குப் பின்னாலும், கேரள அரசு மறுத்தது.

முற்பகல் 11-00

மத்திய நீர் வள ஆணையம் சொல்லியதற்குப் பின்னாலும் கேரள அரசு அந்த அணையினுடைய நீர் மட்டத்தை உயர்த்துவதற்கு மறுத்த காரணத்தினால், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தப் பிரச்சினையை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றார்கள். உச்ச நீதிமன்றம் மீண்டும் ஆரம்ப காலத்திலிருந்து

2009 ஜூலை 3] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

இந்த வழக்கினுடைய தன்மைகளை நன்கு ஆய்ந்து, ஆராய்ந்தது. பூகம்பம் ஏற்பட்டால், அந்த அணை தாங்காது என்ற அச்சமும் அந்த நேரத்தில் கேரள அரசால் சொல்லப்பட்டது. உச்ச நீதிமன்றம் வல்லுநர்களை அங்கே அனுப்பி, பூகம்பம் ஏற்பட்டால் அந்த அணை தாங்குமா என்கின்ற அளவிற்குக்கூட radiation-களை அந்த அணையின் உள் பகுதிக்குள் செலுத்தி, ஆய்வு மேற்கொண்டதற்குப் பின்னால், பூகம்பமே ஏற்பட்டாலும் இந்த அணை உடையாது என்று அந்த வல்லுநர் குழு உச்ச நீதிமன்றத்திற்கு அறிக்கையும் சமர்ப்பித்து, மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் அனைத்து விவரங்களையும் ஆய்ந்து, ஆராய்ந்து, 27-2-2006 அன்று ஒரு வெற்றிகரமான தீர்ப்பினை, நமக்குச் சாதகமான தீர்ப்பினை, முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர் மட்டத்தினை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்திக்கொள்ளலாம் என்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பினை உச்ச நீதிமன்றம்மூலம் மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்றுத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்லாமல், அந்தத் தீர்ப்பில் பேபி அணை மற்றும் சிற்றணைப் பகுதிகளையும் முழுவதுமாகப் பலப்படுத்துகிற பணி நடைபெறுகின்றபோது கேரள அரசு குறுக்கிடக்கூடாது என்றும், பலப்படுத்துகின்ற பணி முடிவுற்ற பின், மத்திய நீர் வள ஆணையம், மத்திய நீர் வளக் குழுமம் அங்கு சென்று ஆய்ந்து, ஆராய்ந்து, நீரைத் தேக்குவதற்கு சம்மதித்தால் 152 அடியளவுக்குத் தேக்கிக்கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் ஷரத்து கூறுகிறது. ஆனால், 27-2-2006-ல் உச்ச நீதின்றத்தினுடைய தீர்ப்பு பெற்றதற்குப் பின்னால், ஏற்கெனவே இருந்த 2003 ஆம் ஆண்டு கேரள பாசன மற்றும் நீர் பாதுகாப்புச் சட்டத்திற்கு 15-3-2006 அன்று கேரள சட்டமன்றத்தில் கேரள அரசு ஒரு திருத்தம் கொண்டு வந்தது. கேரளத்திலே இருக்கின்ற அணைகளினுடைய நீர் மட்ட அளவினை அறுதியிட்டு ஓர் அறிவிப்பினை அந்தச் சட்டத்திருத்தத்தின்மூலம் கேரள அரசு கொண்டுவந்தது.

136 அடி என்று அந்த அணையினுடைய உயர் நீர்மட்டத்தை அறுதியிட்டு, அதற்குமேல் உயர்த்தக்கூடாது என்பதுதான் அந்தச் சட்டத் திருத்தத்தினுடைய முடிவாக இருந்தது. உடனே மாண்புமிகு அம்மா அவர்கள், இது குறித்து மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினார்கள். ஏனென்று சொன்னால், இரு மாநிலங்களுடைய பிரச்சினையில் ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்பு அதனுடைய சாதக, பாதகங்களை முதலில் மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். அதாவது, உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு முன்னால், மத்திய

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2009 ஜூலை 3

அரசிற்குக் கடிதம் வாயிலாகத் தெரிவிக்க வேண்டும். மத்திய அரசிலிருந்து என்ன பதில் வருகின்றது என்பதனை அனுசரித்துத்தான் உச்ச நீதிமன்றம் செல்ல வேண்டும் என்ற ஒரு நடைமுறை இருக்கின்ற காரணத்தினால் மத்திய அரசிற்கு கடிதம் எழுதப்பட்டது. ஆனால் மத்திய அரசிடமிருந்து சாதகமான பதில் நமக்கு வரவில்லை.

முற்பகல் 11-05

"ஏற்கெனவே வழங்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினை மறுக்கின்ற வகையில் கேரள அரசு ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஆகவே, இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி செல்லத்தக்கது அல்ல. இந்தச் சட்டத் திருத்தத்தினை இரத்து செய்ய வேண்டும்." என்று மாண்புமிகு அம்மா அவர்கள் 31-3-2006-ல் உச்ச நீதிமன்றத்திலே மீண்டும் வழக்கு தொடுத்தார்கள். இந்த அரசு பொறுப்பேற்று 3 ஆண்டுகாலமாகியும் இன்னும் அந்த வழக்கின் பிரச்சினைகளை இந்த அரசு எம்மாதிரி அணுகியிருக்கிறது என்பது தெரியவில்லை. ஒரு மாநிலத்தினுடைய பிரச்சினையில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்குமேயானால் அந்தத் தீர்ப்பினை நடைமுறைப் படுத்துகின்ற பொறுப்பும், கடமையும் அந்த மாநில அரசுக்கு உண்டு. ஆனால், ஒரு வழக்கு இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருந்து உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்படுமேயானால், அந்தத் தீர்ப்பினை நடைமுறைப்படுத்துகின்ற பொறுப்பும், கடமையும் மத்திய அரசுக்கு உண்டு. தொடர்ந்து நீங்கள் 10 ஆண்டுகாலமாக மத்திய அரசில் அங்கம் வகித்துக் கொண்டிருக்கின்றீர்கள். இந்தத் தீர்ப்பு வந்தபொழுதும் நீங்கள் மத்திய அரசில் அங்கம் வகித்துக் கொண்டிருந்தீர்கள். இப்போதும் நீங்கள் மத்திய அரசில் அங்கம் வகித்துக் கொண்டிருக்கின்றீர்கள். இரு மாநிலப் பிரச்சினையில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதற்கு பின்னரும், அந்தத் தீர்ப்பினை அமல்படுத்துவதற்குரிய பொறுப்பிலிருந்தும் கடமையிலிருந்தும் இந்த அரசு தவறி இருக்கிறது என்று இங்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அணையின் நீர்மட்டம் 152 அடியிலிருந்து 136 அடியாகக் குறைக்கப்பட்ட காரணத்தால், 1 இலட்சத்து 20 ஆயிரம் ஏக்கர் நிலங்கள், இந்த 30 ஆண்டு காலத்தில் தரிசாக, பாலைவனமாக, விளைச்சல் இல்லாத நிலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. குடிநீர் ஆதாரம் 6 மாவட்டங்களில் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. 40 சதவிகித மின்சார உற்பத்தி பாதிக்கப்பட்டு, 30 ஆண்டுகாலமாக தமிழகம் வஞ்சிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையில் இவ்வளவு

2009 ஜூலை 3] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

நடந்ததற்குப் பின்னரும், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்துவிட்ட சூழ்நிலையில் கேரள அரசு இவற்றையெல்லாம் ஒரு பொருட்டாகவே கருதாமல் மீண்டும் அந்தப் பகுதிகளில் புதிய அணையைக் கட்டுவதற்குத் தொடர்ந்து முயற்சி செய்து, அதற்குரிய பூர்வாங்கப் பணிகள் அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறது. சர்வே எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே நாம் காவலுக்கு ஆட்களை நிறுத்தக்கூடிய சூழ்நிலைகூட மாற்றப்பட்டிருக்கிறது. ஒப்பந்தத்தின்படியும் 1970-ல் திருத்தப்பட்ட மறு ஆய்வின்படிகூட அந்த அணையினுடைய பாதுகாவலரே தமிழக அரசுதான் என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், இன்றைக்குப் புதிய அணை கட்டுவதனால் அந்த 6 மாவட்ட மக்களுக்கு ஏற்படக்கூடிய வாழ்வாதார பாதிப்பு, குடிநீர்ப் பிரச்சினை, விவசாயிகள் பாதிப்பு ஆகியவற்றால் அந்தப் பகுதி முழுவதுமாக பாலைவனமாகக்கூடிய ஒரு சூழ்நிலையில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த உணவு உற்பத்தி பாதிப்பு, மின்சார உற்பத்தி பாதிப்பு, குடிநீர்ப் பற்றாக்குறை, ஆகியவற்றுக்கெல்லாம் யார் காரணம் ஆகப்போகின்றோம் என்ற கேள்வி எழுந்துள்ளது. அதனால் தமிழகத்தில் இருக்கின்ற அந்த 6 மாவட்ட மக்கள் ஓர் அபாயகரமான சூழ்நிலையை எதிர்நோக்கி கவலை கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இந்த அரசு, அந்த 6 மாவட்ட மக்களுடைய வாழ்வாதாரத்தைக் காப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது, என்ன உறுதிமொழியை இந்தச் சட்டமன்றத்தில் தரப்போகின்றது என்பதனை சபையின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-7-2009 அன்று கேரள முதலமைச்சரின் தலைமையில் நடந்த உயர்மட்டக் குழுவின் கூட்டம், கேரள அரசால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு, முல்லைப் பெரியாறு அணையினைப் பற்றி அளித்த அறிக்கையினை விவாதித்து சில உண்மையற்ற தகவல்களை அளித்துள்ளது. தென் தமிழ்நாட்டின் வாழ்வாதாரங்களில் மிக முக்கியமான பங்காற்றக்கூடிய முல்லைப் பெரியாறு அணையை உடனடியாகச் செயல் முடக்கம் செய்ய வேண்டுமென்றும், அந்த இடத்திலே புதிதாக ஓர் அணை கட்டப்பட வேண்டுமென்றும் கேரள அரசின் இடதுசாரி முன்னணி

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2009 ஜூலை 3

அரசினுடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை, இந்த நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், ஒற்றுமைக்கும், சட்டத்தின் ஆட்சிக்கும் விடப்பட்ட ஒரு சவாலாகவே காங்கிரஸ் கட்சி பார்க்கிறது.

முற்பகல் 11-10

மத்திய அரசின் நீர் ஆதார அமைச்சகம், உச்ச நீதிமன்றம் மற்றும் நமது அரசியல் சாசனச் சட்டம் ஏற்பாடு செய்துள்ள அத்தனை நிறுவனங்களும் சான்றளித்துள்ள முல்லைப் பெரியாறு அணையினுடைய உறுதியை, வலிமையை, அதன் நம்பகத் தன்மையை, ஓர் அரசியல் உள்நோக்கத்தோடு சந்தேகத்திற்கு உள்ளாக்கி, அணையைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் வாழும் மக்கள் மத்தியிலே தேவையற்ற பீதியையும், அச்சத்தையும் உண்டாக்கியிருப்பது, அதிலும் அந்த மாநில அரசே இதை முன்னின்று செய்வது, மிகவும் துரதிருஷ்டவசமானது.

கேரள அரசால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, இந்த ஆண்டு கோடையின்போது தண்ணீர் 109 அடிக்குக்கீழே இறங்கிய வேளையிலே சுவர்களில் காணப்பட்ட வெடிப்புகள் மிகவும் ஆபத்தானவை என்று சொல்லியிருக்கிறது. அந்த நிபுணர் குழு முடிவு குறித்து, "The Expert Committee reports that the cracks and fissures below the level of 112 feet were so grave that water could seep into the structure. The condition at lower levels could be still more serious. There is absolutely no option other than decommissioning the dam and simultaneously building another dam so that Tamil Nadu continues to benefit from the water stored in the reservoir" என்று அந்த மாநிலத்தினுடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் மாண்புமிகு பிரேமச்சந்திரன் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்று சொன்னால், ஏற்கெனவே மத்திய அரசால், உச்ச நீதிமன்றத்தால் சான்றளிக்கப்பட்ட நிபுணர் குழு பார்வையிடுகின்றபோது, இந்த 112 அடிக்குக் கீழேயுள்ள சூழ்நிலைகளையும் ஆய்ந்தறிந்துதானே அவர்கள் அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள்? ஏற்கெனவே இதுசம்பந்தமான ஓர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, என்னென்ன சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அந்த அறிக்கை சொன்னதோ, அத்தனை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, அந்த அணை முழுவதும் பாதுகாப்பானது என்ற தரச் சான்றிதழையும் இந்த நாட்டினுடைய அரசியல் சாசனச் சட்ட அமைப்புகள் தந்த பிறகு, ஒரு

2009 ஜூலை 3] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

மாநிலத்தினுடைய முதலமைச்சரே முன் நின்று, அந்தச் சான்றிதழை, அந்தச் சான்றை, அரசமைப்புச் சட்டம் ஏற்பாடு செய்திருக்கின்ற அந்த அமைப்புகளைக் கேள்வி கேட்பது என்பதை நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இந்திய ஒருமைப்பாட்டிற்கு விடப்பட்ட சவாலாகவே நான் நினைக்கிறேன்.

நாளை, சனிக்கிழமை, மாண்புமிகு பாரதப் பிரதமரைச் சந்தித்து இது சம்பந்தமாகப் பேசவிருப்பதாக கேரள முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார். நான் தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்று சொன்னால், நமது அரசு என்ன செய்யவிருக்கிறது? நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதுசம்பந்தமாகப் பிரதமரிடம் பேச இருக்கிறார்களா அல்லது நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களே நேரில் சென்று பிரதமரைச் சந்தித்து முறையிட இருக்கிறாரா? அப்படி முறையிடச் செல்கின்ற நேரத்திலே, நான் சொல்ல விரும்புவது என்னவென்று சொன்னால், ஒட்டுமொத்தமான தமிழக அரசியல் கட்சிகளினுடைய நல்லெண்ணத்தை முழுவதும் நீங்கள் சுமந்து செல்ல வேண்டும். இதிலே யாருக்கும் அரசியல் ஆதாயம் இல்லை. நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் ஒரு நீண்ட பட்டியலை வாசித்தார்கள். எந்தக் கட்சிக்கும் இதிலே குற்றம் சொல்வதற்கு இடம் இருப்பதாக காங்கிரஸ் கட்சி கருதவில்லை. கடந்த 30 ஆண்டுகளாக இங்கே திராவிட முன்னேற்றக் கழகமும் ஆட்சியில் இருந்திருக்கிறது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஆட்சியில் இருந்திருக்கிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத்தான் நாம் கருதுகிறோம். எந்த ஆட்சியிலும், நம்முடைய நலனையோ, நம்முடைய விவசாயிகளுடைய எதிர்காலத்தையோ கேள்விக்குறியாக்குவதற்கு எந்த அரசும் இடம் கொடுக்கவில்லை. ஆகவே, இப்பொழுதும் எந்தவிதமான அரசியல் மனமாச்சரியங்களும் இன்றி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடம் இதைப்பற்றிப் பேசுகின்றபோது, தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை அரசியல் கட்சிகளும் நம்முடைய முதலமைச்சரின் பின்னால் ஒரே அணியில் அணிவகுத்து நிற்கிறோமா என்பதுதான் இந்த மன்றத்திற்கும், பொதுமக்களுக்கும் நாம் சொல்ல வேண்டிய பதில்.

இன்று நான் இங்கேயிருக்கின்ற பிரதான எதிர்க்கட்சியைக் கேட்கிறேன், அப்படி ஒருவேளை நம்முடைய முதலமைச்சர் அவர்களே முன் நின்று பிரதமரைச் சந்திப்பதற்கான ஒரு தூதுக்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2009 ஜூலை 3

குழுவை ஏற்பாடு செய்வார்கள் என்று சொன்னால், அதில் இங்கே இருக்கின்ற பிரதான எதிர்க்கட்சியைச் சார்ந்த நம்முடைய முன்னாள் முதலமைச்சரும் இடம்பெறத் தயாராக இருக்கிறாரா? இன்றைக்கு இந்த அவையிலே இருக்கின்ற அத்தனை அரசியல் கட்சிகளும் ஒரே குரலாக (குறுக்கீடுகள்) என்ன? இதிலே என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்) ஒரே குரலாக, தமிழகத்தினுடைய ஒரே குரலாக ஒலிப்பதற்கு அரசியல் ஆதாயங்களுக்கு அப்பாற்பட்டு, அரசியல் தொலைநோக்குப் பார்வையோடு இந்தப் பிரச்சினையை அணுகுவதற்கு, தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் தயாராக இருக்கின்றனவா என்பதையும் இந்த அவையின் மூலமாக நான் அறிய விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எடுக்க இருக்கின்ற நடவடிக்கைகளை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

*முற்பகல் 11-15*

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நதிநீர்ப் பிரச்சினைகளில் பலமுனைத் தாக்குதலைத் தொடர்ந்து தமிழகம் அனுபவித்துக்கொண்டிருக்கிறது என்பதை நாடு உணர்ந்திருக்கிறது. அந்த வகையிலேதான், காவிரி நதிநீர்ப் பிரச்சினை, பாலாறு நதிநீர்ப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை, நெய்யாறு பிரச்சினை என பல நதிநீர்ப் பிரச்சினைகள் நமக்கு ஆந்திரா மூலமும், கர்நாடகம் மூலமும் ஏற்பட்டு கேரளா மூலமும் முல்லைப் பெரியாறு அணைக்கு மிகப் பெரிய சோதனை வந்துகொண்டிருக்கின்றது. இந்தச் சோதனையை அவர்கள் இன்றோ, நேற்றோ நமக்கு ஏற்படுத்தவில்லை. முல்லைப் பெரியாறு பிரச்சினையில், முல்லைப் பெரியாறு அணை மிகவும் பலவீனப்பட்டிருக்கின்றது என்று அவர்கள் தொடர்ந்து 1979-லிருந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பலவீனப்பட்டிருக்கின்ற அந்த அணையின் கொள்ளளவைக் குறைக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னால்கூடப் பரவாயில்லை. அந்த அணையையே தரைமட்டமாக்கி, புதிய அணையைத்தான் கட்ட வேண்டும் என்று தொடர்ந்து கேரள அரசு சொல்லி வருகிறது. அதற்கு அப்பகுதியில் உள்ள அரசியல் உள்நோக்கம்தான் காரணம் என்று சொல்லப்படுகிறது.

2009 ஜூலை 3] [திரு. கி. ஆறுமுகம்]

இன்னொரு பக்கம் பார்த்தால், இந்த அணையின் கொள்ளளவு 152 அடி இருக்கின்றது. அந்த அணையைக்கூட நானும், எங்கள் தலைவர் அவர்களும் ஒரு முறை சென்று பார்த்து வந்திருக்கிறோம். அதனை கட்டிய Pennycuick என்ற ஆங்கிலேயர். இங்கிலாந்து நாட்டிலே இருந்த தனது சொந்த நிலங்களை விற்று அவர் அந்த அணையினைக் கட்டிக் கொடுத்திருப்பதாக அங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்கூட அதில் குறிப்பிட்டிருக்கிறார் — "மனிதன் பிறப்பது ஒரு முறை, அவன் அதிலே சாதனை படைக்க வேண்டும்" என்று. அவர் சொல்லிய அந்தக் கருத்துகூட அணையின் அருகில் அவருக்கு வைத்திருக்கின்ற சிலையின் கீழே பொறிக்கப்பட்டிருக்கின்றது. இது மிகப் பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் அணை. இந்த அணை குறித்த பிரச்சினையால் தேனி, மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு ஜீவாதாரப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அங்கு விவசாயம், குடிநீர் போன்றவற்றில் பிரச்சினை ஏற்படுகிறது. எனவே, அந்தப் பிரச்சினைக்கு ஒரு சிறந்த தீர்வு காணவேண்டும். ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் காவிரிப் பிரச்சினை பற்றிப் பேசுகிறோம், பாலாறு பிரச்சினை பற்றிப் பேசுகிறோம், அதேபோல், முல்லைப் பெரியாறு பிரச்சினையையும் பேசிவிட்டு முடித்துவிடக் கூடாது. இது மிகப் பெரிய பிரச்சினை. உயிர்நாடிப் பிரச்சினை. அந்தப் பகுதியில் விவசாயத்தினை நம்பியிருக்கின்ற விவசாய மக்களின் ஜீவாதாரப் பிரச்சினை. இந்தப் பிரச்சினையில், நம்முடைய தமிழக அரசு தன்னுடைய நிலையை மாற்றிக்கொள்ளக்கூடாது. ஏனென்று சொன்னால், ஏற்கெனவே காவிரிப் பிரச்சினையில் பல்வேறு சிக்கல்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அந்த நிலைக்கு இதுவும் வந்துவிடக் கூடாது.

ஏற்கெனவே 2006-ல் இதற்காக உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கின்றது. அந்தத் தீர்ப்பை இதுவரை நிலைநாட்டாததற்குக் காரணம் என்ன? நாம் தொடர்ந்து மத்திய அரசை மதிக்கிறோம். உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மதிக்கிறோம். உயர் நீதிமன்றத் தீர்ப்பை மதிக்கிறோம். ஆனால், அண்டை மாநிலமாக இருக்கின்ற கேரளம் இதை ஏன் மதிக்கவில்லை? இது தேசிய இறையாண்மைக்கு எந்தவகையில் ஒருங்கிணைப்பாக இருக்கும் என்பது ஒரு மிகப் பெரிய கேள்விக்குறியாகவே இருந்துகொண்டிருக்கின்றது. எனவே, இதை அரசு முழு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கேரளாவுக்குத் தேவையான அரிசி, பால், காய்கறிகள், பழங்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை நாம்

[திரு. கி. ஆறுமுகம்] [2009 ஜூலை 3

தினமும் அனுப்பிக்கொண்டு இருக்கின்றோம். மின்சாரத்தினைக்கூட அனுப்பிக்கொண்டிருக்கிறோம். ஆனால், இந்த அணையின் நீர் மட்டத்தினைக் குறைத்தால் கேரளாவுக்கு என்ன இலாபம், உயர்த்தினால் என்ன நட்டம் என்று கேட்க விரும்புகிறோம். ஏனென்று சொன்னால், அந்தத் தண்ணீர் வீணாக அரபிக் கடலில்தான் கலக்கிறது. ஒன்றே ஒன்றுதான் நடக்கின்றது. அங்கே இடுக்கியில் இருக்கின்ற நீர் மின் திட்டத்திற்காகத்தான் இந்த நீர் செல்கிறதே தவிர வேறு எதற்கும் பயன்படவில்லை. விவசாயத்திற்குக்கூடப் பயன்படவில்லை. வீணாக அரபிக் கடலில் போய்தான் கலக்கிறது. எனவே, மத்திய அரசாங்கம்மூலம், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் இதில் தலையிட்டு—இந்த அணையினுடைய உச்ச நீர் மட்ட அளவு 142 அடிதான் தற்போது சொல்லியிருப்பது. ஆனால், நாம் 152 அடிக்குக் குறையாமல் நீர் இருப்பதற்கான நம் நிலைபாட்டினைக் குறைத்துக்கொள்ளக்கூடாது. இந்த அணையில் 152 அடி நீர் நிரம்பினால் சிவகங்கை மாவட்டத்திலும் நம்முடைய 6 தென் மாவட்டங்களிலும் மக்களின் ஜீவாதாரத்தைக் காப்பாற்றுவதற்கு ஒரு நல்ல நிலையை ஏற்படுத்த முடியும். எனவே, நம்முடைய உரிமையை விட்டுக்கொடுக்காமல், இந்த உரிமையைப் பெறுவதற்கு நம்முடைய அரசு முயலவேண்டும். ஏற்கெனவே, கேரள மாநிலக் குழு ஒன்று நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சென்று பார்க்கவிருப்பதாக நம்முடைய அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள். பத்திரிகைகளில் அந்தச் செய்தி வந்துள்ளது. அதுபோன்று நாமும் பாரதப் பிரதமரைச் சந்திக்க இருக்கிறோமா அல்லது மீண்டும் உச்ச நீதிமன்றத்தை அணுக இருக்கிறோமா? 142 அடி போதாது, 152 அடி உயரத்திற்கு நீரினை ஏற்ற வேண்டும்.

ஏற்கெனவே அங்கு இருக்கக்கூடிய நம்முடைய பொதுப் பணித் துறை அதிகாரிகளை அங்குள்ள அதிகாரிகள் அடிக்கின்ற நிலைமை இருந்துகொண்டிருக்கின்றது. அணையைப் பார்வையிடக்கூட அனுமதியில்லை. அங்கே ஒரு நாடகத்தினைக்கூட இரண்டு நாட்களுக்கு முன் நடத்தியிருக்கிறார்கள். முல்லைப் பெரியாறு அணையில் விரிசல் ஏற்பட்டிருப்பதுபோன்ற ஒரு நாடகத்தினை ஏற்படுத்தியிருக்கிறார்கள். புதிய அணையைக் கட்டுவதற்கான முயற்சியையும் எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அங்கு புதிய அணை கட்டினால் நம்முடைய உரிமை பறிபோகும். தமிழகத்தினுடைய உரிமை பறிபோகும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான சரியான நடவடிக்கையை எடுக்க

2009 ஜூலை 3] [திரு. கி. ஆறுமுகம்]

வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டினுடைய ஒரு மிக முக்கியப் பிரச்சினையான முல்லைப் பெரியாறு சம்பந்தமான இந்தப் பிரச்சினையில், மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பான கருத்தை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டினுடைய தென் மாவட்டங்கள், குறிப்பாக மதுரை, தேனி, உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களுடைய நீர்ப் பாசனத்திற்கும், குடிநீர் ஆதாரத்திற்கும் சம்பந்தமான இந்த முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர் மட்டம் உயர்த்தப்பட வேண்டும் என்கிற கருத்தில் மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சிக்கு எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை. 136 அடியாக உள்ள அணையினுடைய நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த வேண்டும் என்கிற உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுதான் தமிழ்நாடு மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்து என்பதை நான் இந்த அவையிலே அழுத்தந்திருத்தமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஏற்கெனவே இதுபற்றி விவாதம் நடந்தபோதும் இந்தக் கருத்தை அன்றைக்கும் நாங்கள் எங்கள் இயக்கத்தின் சார்பாக வலியுறுத்தியிருக்கின்றோம். நம்முடைய பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட தமிழக அரசுமூலம் எடுக்கப்பட்டு வருகிற முயற்சிகளும், அதற்காக மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தை பற்றிய விவரங்கள் எல்லாம் தெரிவிக்கப்பட்டபோது, அது மேலும் தொடர வேண்டும் என்ற எங்களுடைய கருத்தையும் அன்றைக்கு நான் பதிவு செய்திருக்கின்றேன். ஆகவே தமிழக அரசு கேரள மாநில அரசாங்கத்தோடு நேரடியாகவோ, மத்திய அரசின் மூலமாகவோ பேச்சுவார்த்தை நடத்தி இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பதை மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. சி. கோவிந்தசாமி] [2009 ஜூலை 3

இந்தப் பிரச்சினை வருகிறபோதெல்லாம், பொதுவாக இதை ஒரு தமிழ்நாட்டுப் பிரச்சினை என்ற நிலையில் மட்டுமல்லாமல், இது கேரளாவில் ஆட்சி நடத்துகிற, மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியினுடைய அரசுக்கு எதிராக அல்லது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கு எதிரான ஒரு பிரச்சாரமாக பல்வேறு அரசியல் கட்சிகள் பயன்படுத்துவது, உண்மையிலேயே மிகுந்த வேதனை அளிக்கக்கூடிய நிகழ்ச்சி என்பதையும் நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா, எனது அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே பேசுகிறபோது சொன்னார்கள்; 2009 ஜனவரியிலே அந்த மாநில முதலமைச்சர் தலைமையிலே நடந்த கூட்டத்திலே அமைச்சரவைக் குழு எடுத்திருக்கிற சில முடிவுகளைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். அது தேசிய ஒருமைப்பாட்டிற்கு எதிரானது என்ற கருத்தையெல்லாம்கூட இங்கே வைத்தார்கள். நான் அவருக்கு நினைவுபடுத்த விரும்புவது, இந்த அவைக்கும் சுட்டிக்காட்ட விரும்புவது, முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர் மட்டம் 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தப்பட வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்தபோது, கேரளாவில் ஆட்சியில் இருந்தது U.D.F. அரசாங்கம் என்பதை நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன். கேரளாவினுடைய அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு திரு. உமன் சாண்டி அவர்கள் தலைமையிலே இருந்த அரசாங்கம்தான் அதிகாரத்திலே இருந்தது. இருந்தது மட்டுமல்ல; கடந்த 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில்—நண்பர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய நினைவுக்காகச் சொல்கிறேன்—மாண்புமிகு திரு. உமன் சாண்டி அவர்கள் முதல்வராக இருந்த U.D.F. அரசாங்கம்தான், காங்கிரஸ் தலைமையிலான அரசுதான், 136 அடிக்கு மேல் ஒரு சொட்டுத் தண்ணீரைக்கூட அதிகமாக தேக்கக் கூடாது என்று கேரள சட்டமன்றத்திலே தீர்மானம் இயற்றியது என்பதையும் நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, 2003 ஆம் ஆண்டு நதிநீர் சம்பந்தமான ஒரு சட்டமே கேரள சட்டமன்றத்திலே அன்றைய காங்கிரஸ் அரசாங்கத்தாலே கொண்டுவரப்பட்டது. 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அந்தச் சட்டம் இயற்றப்பட்டு, 2004 ஆம் ஆண்டிலிருந்து அது நடைமுறையில் அமலாக்கப்பட்டு வருகிறது. அந்தச் சட்டத்திலே இரண்டு முக்கியமான ஷரத்துகளில் என்ன சொல்லப்படுகிறது என்றால், கேரளாவினுடைய நீராதாரம் அண்டை மாநிலங்களுக்கோ

2009 ஜூலை 3] [திரு. சி. கோவிந்தசாமி]

அல்லது நாட்டினுடைய இதர யூனியன் பிரதேசங்களுக்கோ வழங்கப்பட வேண்டுமானால், கேரள சட்டமன்றத்திலே அதற்கான ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், சம்பந்தப்பட்ட அந்த மாநிலமோ அல்லது சம்பந்தப்பட்ட யூனியன் பிரதேசமோ கேரள அரசாங்கத்தோடு ஓர் ஒப்பந்தத்தை உருவாக்க வேண்டும். அதன் அடிப்படையிலேதான் நீர் வழங்க வேண்டுமென்ற ஒரு சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றியது காங்கிரஸ் தலைமையிலான அரசு என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நெய்யாற்றுப் பிரச்சினையில் இன்றுவரையில் தண்ணீர் கிடைக்காததற்கு அந்தச் சட்டம்தான் காரணமாக இருக்கிறது என்பதையும் நான் இங்கே கவனப்படுத்துவதோடு, கேரளாவில் இடது முன்னணி அரசாங்கம் வந்த பிறகு அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே அண்டை மாநிலமான நம்முடைய தமிழகத்திற்கு நீர் வழங்க வேண்டும் என்கிற ஒரு தீர்மானத்தையும் சட்டப் பேரவையில் நிறைவேற்றியிருக்கிறது என்பதையும் நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன்.

இதிலே இரு அரசுகளுக்கும் இடையிலே ஓர் ஒப்பந்தம் உருவாவதற்கான முயற்சிகள் தொடர வேண்டுமென்றும் நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

*முற்பகல் 11-25*

ஆகவே, கேரளாவைப் பொறுத்தவரையில், இதற்கு ஏதோ மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சிதான் காரணம் என்பதல்ல; அங்கிருக்கக்கூடிய இடது ஜனநாயக முன்னணி—இந்திய கம்யூனிஸ்டு கட்சி உள்ளிட்ட இடது ஜனநாயக முன்னணியும் சரி—காங்கிரஸ் தலைமையிலான U.D.F. முன்னணியும் சரி—எல்லோரும் சேர்ந்து ஒருமுகமாக முடிவு செய்தது. முல்லைப் பெரியாறு அணையிலே 136 அடிக்கு மேல் தண்ணீரைத் தேக்கக் கூடாது என்பது ஒட்டுமொத்தக் கேரள அரசியல் கட்சிகளுடைய கருத்து; காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு, மார்க்சிய கம்யூனிஸ்டு உள்ளிட்ட எல்லாக் கட்சிகளும் சேர்ந்து எடுத்திருக்கக்கூடிய தீர்மானமேயொழிய, C.P.I. (M.) கட்சியினுடைய தனிப்பட்ட தீர்மானம் அல்ல என்பதையும நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. சி. கோவிந்தசாமி] [2009 ஜூலை 3

அங்கு மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியினுடைய அரசாங்கம், அனைத்துக் கட்சிகளுடைய எண்ணத்தை அமலாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்கிறது. ஆகவே, தமிழ்நாட்டினுடைய நலனைப் பாதுகாப்பதற்கு, அந்த அணையினுடைய நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்கு, தமிழக அரசு எடுக்கிற எல்லா நடவடிக்கைகளுக்கும் மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சி நிச்சயமாகத் துணை நிற்கும் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேநேரத்தில், இரு மாநிலங்களுக்கிடையிலான மோதலாக இந்தப் பிரச்சினையை மாற்றாமல், வாய்ப்பிருந்தால் நேரடியாக இரண்டு அரசுகளும் பேசலாம். அதற்கான வாய்ப்பு குறைவாக இருந்தால், மத்திய அரசினுடைய மத்தியஸ்தத்தோடு பேச்சுவார்த்தை நடத்தலாம். ஆகவே, உரிய முறையில் பேச்சுவார்த்தையின்மூலம் இதற்குத் தீர்வு காண்பதுதான் ஒரே வழி. அதற்குப் பதிலாக, வேறு வகையான மோதல்களை உருவாக்கக்கூடிய இடத்திற்கு நாம் இட்டுச் செல்லக் கூடாது என்பதையும் நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்தி, அப்படிப்பட்ட ஒரு பேச்சுவார்த்தையின் மூலமாக, அணையின் நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்த வேண்டும் என்கிற தமிழ்நாட்டினுடைய இந்த அடிப்படை உரிமையைப் பாதுகாப்பதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் மாநிலக் குழு அதற்கு உறுதுணையாக நிற்கும் என்பதையும் இந்த அவையிலே பதிவு செய்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணை குறித்த விவாதங்களைப் பல முறை நாம் இந்த அவையிலே எழுப்பியிருக்கிறோம். கேரள மாநிலத்திலிருந்து 'புதிய அணை கட்டப்படும்' என்ற அறிவிப்புகள் தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கின்றன. அவர்கள் புதிய அணை கட்ட வேண்டிய அவசியம் ஏன் எழுகிறது என்ற கேள்வி நம்மால் எழுப்பப்படுகிறது. இதற்கு முன்னாலேயே, முல்லைப் பெரியாறு அணைக்குக் கீழே, இடுக்கியிலே கேரள அரசின் சார்பிலே ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. அவர்களுடைய தேவை என்ற முறையிலே, அந்த அணைக்குத் தண்ணீர் தேவைப்படுகிறது; மின் உற்பத்தியும் செய்யப்படுகிறது. நம்முடைய மாநிலத்திற்கு இதுவொரு பிரச்சினையை ஏற்படுத்தியிருக்கிறது.

2009 ஜூலை 3] [திரு. வை. சிவபுண்ணியம்]

குறிப்பாக, இந்த பெரியாறு அணையிலே நீர் தேக்கப்படுவதிலேயும் வித்தியாசமான நிலையிருக்கிறது. எல்லா அணைகளிலும் நீர்த்தேக்கப் பகுதியினுடைய முன்பக்க வழியாகத்தான் தண்ணீர் வெளியேற்றப்படும். ஆனால், பெரியாறு அணை, பின்பக்க வழியாகத் தண்ணீர் வெளியேற்றுகிற விநோதமான அமைப்பினைக் கொண்டது. ஆகவே, 136 அடிக்குத் தண்ணீர் தேக்கினால்—குறிப்பாக, நமது அரசின் சார்பிலும், பொறியாளர்கள் மட்டத்திலும் சொல்கிற கணக்குப்படி பார்த்தால், 105 அல்லது 110 அடிக்கு மேலே தண்ணீர் இருக்கிறபொழுதுதான், நம்மாலே தண்ணீர் எடுக்க முடிகிறது. 2,000 கன அடி என்ற அளவிலேதான் நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, தண்ணீர் எடுப்பதனுடைய அளவே நமக்குப் பிரச்சினையாக இருக்கிறது; அந்த அணையினுடைய அமைப்பே அப்படியிருக்கிறது—அதையும் தாண்டி, இந்த அணையின் உயரத்தை மேம்படுத்தினால் பிரச்சினை வரும் என்று அந்த மாநில அரசு தடுக்கிறது. காரணம், வலுவிழந்த நிலையிலே அந்த அணை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. 'அணை வலுவாக இருக்கிறது; 142 அடி வரை உயர்த்தலாம்' என்று சொல்லியிருக்கிறது.

காவிரிப் பிரச்சினையிலும் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நதிநீர்ப் பிரச்சினைகளுக்கெல்லாம் பல தீர்ப்புகள் இந்தியா முழுமையிலும் வழங்கப்படுகின்றன. அது உச்ச நீதிமன்றமானாலும், நடுவர் மன்றமானாலும், மத்திய அரசாங்கத்தின்மூலமாக வருகிற பல நடவடிக்கைகளானாலும், இதிலே தீர்வு காண வேண்டிய பொறுப்பும், கடமையும் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. நதிநீர்ப் பிரச்சினை வருகிறபொழுதெல்லாம், அதைத் தீர்க்க வேண்டிய பொறுப்பிலே இருப்பது மத்திய அரசுதான். இதை நான் அரசியலுக்காகச் சொல்லவில்லை; காலம் காலமாக மத்திய அரசு இந்தப் பிரச்சினைகளிலே தலையிட்டுத் தீர்வு காணத் தவறியதன் விளைவாக, மாநிலங்களுக்குள்ளேயே இப்படிப்பட்ட கருத்து, பிரச்சினைகள் என்ற முறையிலே மோதலாக, வருத்தமாக ஏற்பட்டு, இப்படிப்பட்ட விளைவுகளைச் சந்திக்க வேண்டிய அவசியத்திற்கு நாம் ஆளாகிறோம். மாநில நலன்கள் என்ற முறையில், அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகள், அந்தந்த மாநில நலனில் அக்கறை கொண்டுதான் பேச முடிகிறது.

இங்கே சகோதரர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், இடதுசாரிக் கட்சிகள் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2009 ஜூலை 3

இங்கே அதற்குரிய விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த நாட்டைத் தொடர்ந்து ஆண்டு கொண்டிருப்பது காங்கிரஸ் கட்சி என்ற காரணத்தினாலே, இந்த நதிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலே மிகப் பெரிய பங்கினை வகித்திருக்க வேண்டியவர்களும், வகிக்க வேண்டியவர்களும் அக்கட்சியினர்தான்.

முற்பகல் 11-30

இந்த விஷயத்தை இவர்கள் ஆழமாக உணராமல் எந்தக் காலத்திலும் தீர்வு ஏற்படுத்தமுடியாது. ஏதாவது ஒரு சாக்குப்போக்குச் சொல்லித்தான் நாம் காலத்தைக் கடத்துவோம். ஆனால், தமிழகத்திற்கு என்ன நிலைமை என்றால், அண்டை மாநிலங்களை அனுசரித்து அவற்றிடமிருந்து நீர் பெறுகிற நிலையிலே பூகோளரீதியாகவே நம்முடைய மாநிலம் அமைந்துவிட்டது. அதுதான் துரதிருஷ்டம். நாம் மற்றவர்களுக்குத் தண்ணீர் வழங்குவதென்பது அனேகமாக இல்லை. அண்டை மாநிலப்பகுதி என்று சொன்னால், காரைக்காலுக்குக் கொஞ்சம் தண்ணீர் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அவ்வளவுதான். மீதி எல்லா இடங்களிலுமே, தண்ணீர் பெறுகிற நிலையிலேதான் நம்முடைய மாநிலம் இருக்கிற காரணத்தினாலே இப்படி ஓர் இக்கட்டான நிலைக்கு நம்முடைய தமிழகம் ஆளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையிலே, இப்போது புதிய நிலைமை என்னவென்றால், கேரளாவிலே ஏற்பட்ட நில நடுக்கம். அந்த நில நடுக்கத்தைப் பயன்படுத்தி, உடனடியாக கேரளப் பொறியாளர்கள் நமது அணையிலே ஆய்வு செய்கிறார்கள். அப்படி ஆய்வு செய்து, "பல இடங்களிலே விரிசல்கள் ஏற்பட்டுவிட்டன; எனவே அணை பலம் இழந்துவிட்டது; எனவே, புதிய அணை கட்ட வேண்டும்" என்று ஒரு புதிய கோரிக்கையை வைத்துவிட்டார்கள். அந்த மாநிலத்திலே, அதுவும் 8.5 கிலோ மீட்டருக்கு அப்பாலே அந்த நில நடுக்கம் வந்ததாகப் பத்திரிகையின் வாயிலாக தகவல் சொல்லப்படுகிறது. அதனால் இந்த அணையிலே பாதிப்பு ஏற்படாது; 6, 6.5 ரிக்டர் அளவுக்குக்கூட நில நடுக்கத்தைத் தாங்குகிற வலு இருக்கிறதென்று நம்முடைய தமிழகப் பொறியாளர்கள் சொல்கிறார்கள். நில நடுக்கம் நடைபெற்ற இடமோ வேறு இடத்தில் இருக்கிறது. ஆனால், ஆய்வு முல்லைப் பெரியாறிலே நடைபெறுகிறது.

2009 ஜூலை 3] [திரு. வை. சிவபுண்ணியம்]

நான் கேட்கின்றேன், அப்படி நடைபெறுகிறபோது நம்முடைய தமிழகத்தின் சார்பில் நம்முடைய பொறியாளர்களோ, நம்முடைய காவல் துறையினரோ ஏதாவது தடுத்தார்களா, நடவடிக்கை எடுத்தார்களா? அதிலே நம்முடைய எதிர்ப்பைத் தெரிவித்தோமா, இல்லையா என்கிற செய்திகள் வரவில்லை. நாம் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கலாம். ஆனால், நம்மிடம் சொல்லாமலே அவர்கள் ஓர் ஆய்வைச் செய்து, அதற்கு ஒரு தீர்வு, அதற்கு பல விளைவுகள், கருத்துகள் என்று வெளிவருகிறபோதுதான் நம்முடைய தமிழ்நாட்டிலே, குறிப்பாக இந்த 6 மாவட்டங்களினுடைய மக்களுடைய மனதிலே அச்சமும், சந்தேகமும், வருத்தமும் ஏற்படுகிறது. இதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியம் இருப்பதாக நான் கருதுகிறேன். ஆகவே, இந்தப் பிரச்சினையில் உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டியது அவசியமாக இருக்கிறது.

புதிய அணை கட்டப்படுமானால் நமக்கு அறவே தண்ணீர் கிடைக்காது. அனேகமாக பெரியாறு நீர் இல்லை என்று முடிவாகிவிடும். பூகோளரீதியாக புதிய அணை இப்போது இருக்கிற இடத்தில் கட்டப்பட்டாலே, நீர்மட்டம் 110 அடி இருந்தால்தான் தண்ணீர் எடுக்க முடியும். இதைவிட தள்ளி, புதிய அணை கட்டப்படுமானால் நமக்குத் தண்ணீரே வராது என்ற நிலைமை ஏற்படும். நம்முடைய பொறியாளர்கள் சொல்கிறபடி இதுதான் அங்கேயிருக்கிற அமைப்பு ரீதியான கணக்கு. ஆகவே, அந்த நிலைமையில் புதிய அணை என்பது, பெரிய அளவிலே பாதிப்பை ஏற்படுத்திவிடும். குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏற்படும். நம்முடைய 6 மாவட்ட மக்களினுடைய பிரச்சினையாக இது மாறுகிறபோது, மத்திய அரசாங்கம்தான் இந்தச் சிரமத்தை உணர்ந்து தலையிட வேண்டும். இதுதான் மற்ற இடங்களிலேயும் வருகிறது; காவிரியிலும் வருகிறது. இப்படியே கால நீட்டிப்புச் செய்வது என்பது தீர்வுக்கு உதவாது.

இன்னும் ஒன்று. கேரள அரசினுடைய முயற்சி என்னவென்று பார்க்கிறபொழுது, அவர்களுடைய மின் தேவை அதிகமாக இருப்பதாக நான் உணருகிறேன். அது சரியா, தவறா என்று எனக்குத் தெரியவில்லை. அப்படியானால், அவர்களது மின் தேவையைப் பொறுத்து, மின் உற்பத்திக்கான விஷயங்களைப் பொறுத்து, ஏதாவது நம்முடைய அரசின் சார்பிலே பேச்சுவார்த்தை நடத்துவதற்கு உரிய முயற்சிகள் இருக்கின்றனவா? அப்படி தேவை இருக்குமானால் அந்தப் பரிமாற்றங்கள், அந்த உற்பத்திகளுக்கான முறைகளிலே இது ஏதும் தடையாக இருக்கிறதா? இதையெல்லாம்கூட ஆய்வு செய்து, இந்தப்

[திரு. வை. சிவபுண்ணியம்] [2009 ஜூலை 3

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமா என்பதைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

எல்லாவற்றுக்கும் மேலாக, மத்திய அரசாங்கம், மாநிலங்களுக்கிடையே எழுகிற தாவாக்களை உடனடியாகத் தீர்ப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். நதிகளைத் தேசவுடைமையாக்காமல் எந்தக் காலத்திலும் இந்தப் பிரச்சினை தீராது. அதைத் தீர்க்காமல் இருப்பதே மத்திய அரசுதான். இதன்மூலமாகவாவது அவர்களுடைய சிந்தனையிலே தெளிவு பிறக்கட்டும், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, ம.தி.மு.க. சார்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணை, அதன் வரலாறு, அந்த அணை தொடர்பாக போடப்பட்ட ஒப்பந்தங்கள், முல்லைப் பெரியாறு அணைக்கான பிரச்சினைகள், வழக்குகள் இவை பற்றியெல்லாம் இந்த மாமன்றத்தில் பல முறை கூறப்பட்டுள்ளது, விவாதிக்கப்பட்டுள்ளது.

பெரியாறு அணை வலுவாக உள்ளது என்றும் இந்த மாமன்றத்தில் நாம் விவாதித்திருக்கிறோம். இந்த நிலையில் கேரள அரசு தனது அதிகாரிகளை முல்லைப் பெரியாறு அணைப் பகுதிக்கு அனுப்பி, நமது அதிகாரிகளைத் தாக்குவதும், அவர்களோடு வாதிடுவதும், அணை வலுவிழந்துவிட்டது என்று விஷமத்தனமான அறிக்கைகளை விடுவதும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. இந்த நிலையில், இவற்றுக்கும் மேலாக இப்போது கேரள அரசு, முல்லைப் பெரியாறு அணைக்குப் பதிலாக வேறு ஓர் அணை கட்டப்பட வேண்டுமென்று வேறு அறிவித்துள்ளது.

*முற்பகல் 11-35*

கேரள அரசின் இந்த நடவடிக்கைகள், முல்லைப் பெரியாறு அணைப் பாசன விவசாயிகள் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் அதிர்ச்சியையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே, கேரள அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க, இந்த அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன், நன்றி.

2009 ஜூலை 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அண்டை மாநிலங்களாக இருக்கின்ற ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மூன்று மாநிலங்களோடும் நமக்கு நதிநீர்த் தாவா இருந்துகொண்டிருக்கிறது. இந்த மாநிலங்களை எந்த மாநிலக் கட்சிகளும் ஆளவில்லை. தேசிய கட்சிகள்தான் ஆளுகின்றன. அது காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, பி.ஜே.பி-யாக இருந்தாலும் சரி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியாக இருந்தாலும் சரி, தேசிய கட்சிகள்தான் அங்கு ஆண்டுகொண்டிருக்கின்றன. ஆனால், நதிநீர்ப் பிரச்சினை என்று வரும்போது இந்தக் கட்சிகள் எல்லாம் தங்களுடைய மாநில நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்படுவதை நாம் பார்க்கின்றோம். ஆனால் 'உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்குக் கைக் கொடுப்போம்' என்று முழங்கிய நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு இந்தியாவிற்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி, கர்நாடகாவிலே பல ஆண்டுகளாக மூடிக்கிடந்த திருவள்ளுவர் சிலையை திறப்பதற்கான ஓர் அற்புதமான வழியைக் கண்டறிந்து, கன்னடக் கவிஞர் ஒருவருக்கு இங்கே சிலை அமைத்து அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, அந்தச் சிலையைத் திறப்பதற்கான வழியைக் கண்டிருக்கின்றார்கள். சிலையைத் திறப்பதற்கு மட்டுமல்ல, இதுபோன்ற நதிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நாம் எந்த அளவிற்குப் பரந்த மனப்பான்மையோடு, தேசியக் கண்ணோட்டத்தோடு நடந்துகொள்ள வேண்டும் என்கின்ற ஒரு பாடத்தைத்தான் இன்றைக்கு இந்தியாவிற்கே அவர் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த விதத்திலே நம்முடைய முதல்வர் அவர்களுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பிலே என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த முல்லைப் பெரியாறு பிரச்சினையைப் பொறுத்தமட்டிலே நாம் கேரளாவிடமிருந்து பெறுகின்ற நீரைவிட கேரளாவிற்கு நாம் அளிக்கிற நீர்தான் அதிகம். இன்றைக்கு நதிநீர் தாவாக்களைக் கையாளுகிறவர்கள் சர்வதேச அளவிலே virtual water அதாவது கண்ணுக்குப் புலப்படாத தண்ணீர் என்கின்ற ஒரு கருதுகோலைப் பயன்படுத்துகிறார்கள். அதாவது நாம் இன்றைக்கு கேரளாவிற்கு அனுப்புகிற உணவுப் பொருட்களுக்குச் செலவிடுகிற தண்ணீர் எல்லாம் கண்ணுக்குப் புலப்படாத தண்ணீராக virtual water ஆகக்

[திரு. து. ரவிக்குமார்] [2009 ஜூலை 3

கணக்கிடப்பட வேண்டும். அப்படிக் கணக்கிட்டோமேயானால், நாம் முல்லைப் பெரியாறு அணையிலிருந்து பெறுகின்ற தண்ணீரைவிட அந்த மாநிலத்திற்குக் கொடுக்கின்ற தண்ணீரின் அளவு அதிகமாக இருக்கிறது. இந்தக் கணக்கீட்டைச் செய்து பார்த்தோமேயானால் நமக்கு அந்த அணையிலிருந்து வருகின்ற தண்ணீரின் அளவை இன்னும் கூடுதலாக்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே, இந்தப் பிரச்சினையைப் பேசும்போது, இன்றைக்கு சர்வதேச அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற அந்த virtual water என்கின்ற concept-ஐப் பயன்படுத்தி நம்முடைய மாநில அரசு வாதிட வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். இன்றைக்கு உச்ச நீதிமன்றம் சொன்னாலும் சரி, அதுபோல Central Water Commission சொன்னாலும் சரி, யார் எதைச் சொன்னாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்கின்ற ரீதியிலே நம்முடைய அண்டை மாநிலங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆந்திராவிலேகூட Central Water Commission சொன்னதற்கு மாறாக இன்றைக்கு பாலாற்றிலே அணை கட்டுவதற்கு அனுமதியளிப்போம் என்று மத்திய வனத் துறை அமைச்சர் சொன்னதாகச் செய்திகள் வந்து, நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள்கூட அதற்காக விளக்கம் அளித்திருக்கிறார்கள்.

இப்படி ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு பிரச்சினையாலே தமிழக மக்கள் தவிக்கின்ற நிலை ஏற்படுகிறது. அதிலும் குறிப்பாக கேரளாவிலே நில நடுக்கம் வந்துவிட்டால், தமிழக மக்கள் நடுங்கிச் சாக வேண்டியிருக்கிறது. இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கு நம்முடைய தமிழக முதல்வர் காட்டியிருக்கின்ற வழியை, இன்றைக்கு மத்தியிலே ஆளுகிறவர்கள் கவனித்து, அதையே ஓர் உதாரணமாக எடுத்துக்கொண்டு இந்தப் பிரச்சினையிலே உடனே தலையிட்டு மத்திய அரசு ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு, நம்முடைய அரசு வலியுறுத்த வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசு முல்லைப் பெரியாறு அணைக்குப் பதிலாக, புதியதோர் அணையைக் கட்டுவது என்ற ஒரு நிலைப்பாட்டை எடுத்து, அது குறித்து விளக்குவதற்காக பாரதப் பிரதமரைச் சந்திக்கப்போவதாக வந்திருக்கிற அந்த செய்தி குறித்து இந்த அவையிலே இருக்கிற எல்லாக் கட்சி நண்பர்களும், தங்களுடைய

2009 ஜூலை 3] [திரு. துரைமுருகன்]

ஆதங்கத்தை, வருத்தத்தை, ஆத்திரத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எல்லோரும் ஒத்த குரலிலே நின்று, இதற்குத் தமிழக அரசு தக்க பதிலடி தர வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக நான் உங்களைப் பாராட்டுகிறேன்.

முற்பகல் 11-40

நீங்கள் கொண்டிருக்கின்ற ஆதங்கம் இந்த அரசுக்கும் உண்டு. அதிலே நாங்களும் பங்குகொள்கிறோம். இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. கி. ஆறுமுகம், திரு. சி. கோவிந்தசாமி, திரு. வை. சிவபுண்ணியம், திரு. ஆர். ஞானதாஸ், திரு. து. ரவிக்குமார் ஆகியோர் பல கருத்துகளை, எல்லோரும் ஒத்த குரலில், ஆங்காங்கே சிறு சிறு பிசிறு இருந்தாலும், மற்றபடி சங்கீதத்திலே பிசிறு இல்லாத சங்கீதம் என்பார்களே அப்படி, தங்கள் குரலை எழுப்பியிருக்கிறீர்கள். அவர்களுக்கெல்லாம் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்கள் பேசியதற்குப் பதில் சொல்வதற்குமுன், முதலில் இந்தப் பிரச்சினைபற்றி ஒரு சிறிய விளக்கத்தை மட்டும் தெரிவித்துவிடுகிறேன். 1979 ஆம் ஆண்டிலே முதலில் இந்தப் பிரச்சினை ஆரம்பித்தது. யாரோ ஒரு பத்திரிகைக்காரன், போகிறபோக்கில் அணை பலஹீனமாக இருக்கிறது என்று சொன்னான். அதை ஒரு பெரிய பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, கேரளாவிலே ஒரு புரளி கிளப்பப்பட்டது. அப்போது Central Water Commission-னுடைய Chairman ஆக இருந்தவர் தாமஸ் அவர்கள். அவரே நேரில் வந்து பார்த்தார். நேரில் வந்து பார்த்தபிறகு, அந்த அணையின்மீது நின்றே சொன்னார்; அவருடைய அதிகாரிகளையும், Engineer-களையும் அழைத்துவந்து பார்த்துவிட்டு, அணை பலமாக இருக்கிறது என்று சொல்லிவிட்டு, திருவனந்தபுரம் சென்றுவிட்டார். மறுபடியும் திருவனந்தபுரத்திற்குத் தமிழக அரசு அதிகாரிகளையும், கேரள அதிகாரிகளையும் அழைத்துப் பேசிய பிறகு, "இல்லை, இல்லை. பலஹீனமாகத்தான் இருக்கிறது" என்று கேரள அரசு ஒப்பாரி வைக்க ஆரம்பித்தது. "அப்படியென்றால், என்ன செய்ய வேண்டும்" என்று அவர் கேட்டார். "அணையைப் பலப்படுத்தச் சொல்லுங்கள்" என்று கேரளா சொன்னது. அப்பொழுது இங்கே முதல்வராக இருந்தவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அவர்கள் உடனே அன்றைக்கு ஆணையிட்டார்கள்; "அணையை நாங்கள் பலப்படுத்துகிறோம்" என்று சொன்னார்கள். பலப்படுத்துகிற அந்தப் பணியை, அவர் காலத்திலே தொடங்கி, பிறகு கலைஞர் அவர்கள் 1989-ல் முதலமைச்சராக

[திரு. துரைமுருகன்] [2009 ஜூலை 3

வந்தபொழுது, நானே பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்து, அந்த அணையைப் பலப்படுத்தியிருக்கிறோம். ''எப்படிப் பலப்படுத்துவது?'' என்று கேட்டார்கள். அவர்கள் சொன்னார்கள், முதலிலே அதிகமாக தண்ணீர் வந்தால், வழிந்தோடுவதற்கு 9 கண்கள்தான் இருக்கின்றன; மீண்டும் 3 கண்கள் அதிகமாக வைக்க வேண்டுமென்றார்கள். அதை வைத்துவிட்டோம். Apron—தண்ணீர் குதிக்கின்ற இடம்—சரியில்லையென்றார்கள். அதைச் சீர்படுத்திவிட்டோம். அணையினுடைய அடிபலம் சரியில்லையென்றார்கள். Anchor போட்டு, அதற்குள்ளே இரும்பு கம்பிகளை (rods) விட்டு, அதிலே சிமென்ட் கலவையைவிட்டுப் பலப்படுத்தினோம். இன்னும் அணை பலஹீனம் என்றார்கள். அணைக்கு முட்டுக் கொடுக்கிற—back பண்ணுகின்ற அந்தப் பணியையும் செய்தோம்.

ஆகவே, இவ்வளவையும் செய்து முடித்த பிறகு, baby dam-ஐ பலப்படுத்த வேண்டுமென்றார்கள். அதற்கு நாங்கள் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். அப்பொழுதுதான் பிரச்சினை. "இப்பொழுது அணையைப் பலப்படுத்திவிட்டோம்; இப்பொழுது நாங்கள் தண்ணீரை நிரப்பலாமா?" என்று கேட்டோம். உடனே என்ன சொன்னார்கள்? "பலப்படுத்திவிட்டீர்கள், 136 அடிக்கு மேல் தண்ணீரை நிறுத்தக் கூடாது" என்று சொன்னார்கள். 136 அடிக்கு மேல் தண்ணீரை நிறுத்தக் கூடாது என்று சொன்னதால்தான் பிரச்சினை ஏற்பட்டது. பிரச்சினை ஏற்பட்ட பிறகு என்ன நடந்தது? கேரள விவசாயிகள் 136 அடிக்கு மேல் தண்ணீரை நிறுத்தக் கூடாது என்று கேரள உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்தார்கள். தமிழக விவசாயிகள் நம்முடைய உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்தார்கள். இரண்டு உயர் நீதிமன்றங்களிலே ஒரே பிரச்சினை பற்றிய வழக்கு இருந்தால், அதை விசாரிப்பது உச்ச நீதிமன்றம்தான். அதைத்தான் நம்முடைய பன்னீர்செல்வம் அவர்கள் சொன்னார்கள், அவர்களுடைய அம்மா நடவடிக்கை எடுத்தார்கள் என்று. அப்பொழுது இருந்த சர்க்கார் என்ன செய்ய வேண்டும்? இரண்டு உயர் நீதிமன்றத்திலும் ஒரே பிரச்சினை இருந்தால், it should be transferred to the Supreme Court. "அதை மாற்றுங்கள்" என்று அவர்கள் சொன்னார்கள். உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கு போய்விட்டது. அங்கே தீர்ப்பையும் வாங்கிவிட்டோம். தீர்ப்பு வழங்குகிறபொழுது, என்ன சொன்னார்களென்றால், நீதிமன்றத்தில் தீர்ப்பு சும்மா கொடுத்துவிடவில்லை.

2009 ஜூலை 3] [திரு. துரைமுருகன்]

மத்திய சர்க்கார் இதில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று உறுப்பினர்கள் சொன்னார்கள். இதற்கு முன்பாக நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு யோசனையைச் சொன்னார்கள். "உங்கள் engineers, அணை பலமாக இல்லை என்கிறார்கள்; எங்கள் engineers, அணை பலமாக இருக்கிறது என்கிறார்கள்." உங்கள் engineers-இடம், அணையில் என்னென்ன பலஹீனம் இருக்கிறது என்பது குறித்து ஒரு report வாங்குங்கள், அதேபோல எங்கள் engineers-ஐயும் கொடுக்கச் சொல்கிறேன்; இதை அவர்களிடம் கொடுங்கள்; அதை இவர்களிடம் கொடுங்கள்; இரண்டு பேரும் உட்கார்ந்து பேசி ஒரு முடிவு செய்யுங்கள்" என்ற ஒரு யோசனையையும் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு அவர்கள் என்ன செய்தார்களென்றால், அவர்கள் நம்முடைய report-ஐ வாங்கினார்களே தவிர, அவர்கள் திருப்பி report கொடுக்கவேயில்லை, இன்றையவரையில். அப்படி நின்றுபோன பிறகுதான், மத்திய சர்க்கார் தலையிட்டு, அந்தந்த மாநில engineers அப்படித்தான் சொல்வார்கள் என்று சொல்லி, இந்தியாவிலேயே மிகப் பெரிய Hydrologist ஆன Mittal என்ற நிபுணரைக் கொண்டு, பல மாநிலங்களில் இருக்கின்ற பெரிய, பெரிய நீரியல் நிபுணர்களைக் கொண்டு, நம் சார்பாக ஒரு engineer, கேரளா சார்பாக ஒரு engineer என, ஒரு கமிட்டி அமைத்து, போய்ப் பார்த்துவிட்டு வரச் சொன்னது. அவர்கள் மூன்று முறை, நான்கு முறை அணைக்கு வந்து, இந்த Dam weak ஆக இருக்கிறதா என்று பார்த்து, பெரிய பூகம்பம் வந்தால் தாங்குமா என்று அதையும் பார்த்து, அணை பலஹீனமாக இருக்கிறதா, இல்லையா என்பதைச் சோதித்துப் பார்ப்பதற்கு dynamic test எல்லாம் பண்ணி, உள்ளே செலுத்திப் பார்த்து, எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்து, அணை பலமாக இருக்கிறதென்று report-ஐக் கொண்டுபோய் Central Water Commission-னிடம் கொடுத்தார்கள்.

முற்பகல் 11-45

Central Water Commission study செய்த பிறகு, Central Government-க்கு அறிக்கை அனுப்பப்பட்டது. பிறகு, அதை Supreme Court-லே கொடுத்தோம்; எதில் என்றால், அந்த இரண்டு விவசாயிகள் போட்ட வழக்கில். Supreme Court அதை ஏற்றுக்கொண்டு "இப்பொழுது அணை பலமாக இருக்கிறது. எனவே, 142 அடி வரையிலே தண்ணீர் நிறுத்துங்கள், பேபி டேம் கட்டுவதற்கு கேரள அரசு, தமிழ்நாட்டைத் தடுக்கக்கூடாது. பேபி டேம் கட்டிய பிறகு, Central Water Commission வந்து பார்த்து, நன்றாக இருக்கிறதென்று

[திரு. துரைமுருகன்] [2009 ஜூலை 3

சொன்னால், 152 அடிவரை தண்ணீரை நிறுத்தலாம்" என்று ஒரு தீர்ப்பைக் கொடுத்தது. அந்தத் தீர்ப்பைக் கொடுத்தவுடனே, கேரள அரசு இந்தத் தீர்ப்பை review பண்ண வேண்டுமென்று சொன்னது. Review பண்ண வேண்டிய அவசியம் இல்லையென்று முதலில் உச்ச நீதிமன்றம் சொல்லிவிட்டது. மறுபடியும் ஒரு petition போட்டார்கள், இந்தத் தீர்ப்பை review பண்ணுங்கள் என்று. மறுபடியும் சொன்னதைத்தான் சொல்வோம், முடியாது என்று உச்ச நீதிமன்றம் சொன்னது. இங்கே குறிப்பிட்டதைப்போல, கேரள நீர்ப்பாசனப் பாதுகாப்புச் சட்டம் என்று ஒரு சட்டத்தைப் போட்டு வைத்திருந்தார்கள், 2003 ஆம் ஆண்டில். அப்போதுதான் கேரள அரசு அதிலே ஒரு amendment-ஐக் கொண்டு வந்தது. அந்த முதல் சட்டத்தின் நோக்கம் என்னவென்றால், கேரளாவில் இருக்கக்கூடிய dams எது எதை, என்னென்ன செய்யலாம் என்பதுதான். அதுவரையிலும், நம்முடைய பெரியாறு அணையை அந்தச் சட்டத்திலே இணைக்கவில்லை. 2006, சட்டத் திருத்தத்தில் பெரியாறு அணையையும் அவர்களது மாநிலத்தினுடைய dam ஆகக் கருதி சேர்த்து, இந்த dam-ல் எவ்வளவு தண்ணீரை நிறுத்துவது என்கின்ற உரிமை கேரள அரசுக்கு உண்டு. கேரள அரசு நினைத்தால், தண்ணீரை நிறுத்தாமல் இருக்கலாம். இந்தப் பவர் எல்லாம் இருக்கிறதென்று சட்டத் திருத்தம் கொண்டு வந்தது. அது தவறு என்று தமிழக அரசு சார்பிலே மறுபடியும் ஒரு வழக்குப் போட்டிருக்கிறோம். அந்த வழக்கு இப்பொழுது நடந்துகொண்டிருக்கிறது.

இந்த அரசு ஒன்றும் செய்யவில்லை என்று உறுப்பினர் சொன்னார். இந்த வழக்குப் போட்டவுடனே உச்ச நீதிமன்றம் என்ன சொன்னதென்றால், ''உங்கள் விவகாரம் என்னவென்று எல்லாவற்றையும் நீங்கள் கொடுங்கள். அதேபோன்று கேரளாலிருந்து நீங்களும் கொடுங்கள்" என்று இரு சர்க்காருக்கும் Supreme Court நோட்டீஸ் கொடுத்தது அதிலே, இரு மாநிலங்களும் கூடுதல் ஆவணங்களைச் சமர்ப்பிக்க நான்கு வார கால அவகாசம் கொடுத்து சாட்சியங்களின் உறுதி வாக்குமூலங்களை ஆறு வார கால அவகாசத்திற்குள் அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். 21-7-2008 அன்று ஓய்வு பெற்ற இராஜஸ்தான் நீதிபதி திரு. அனில் தேவ் சிங் என்பவரை நியமித்து, இரு மாநில சாட்சிகளின் சான்றுகளைப் பதிவு செய்யச் சொன்னார்கள். Argument-க்கு என்ன வேண்டுமென்று கேட்டார்கள். 10-2-2009 அன்று வழக்கு இறுதிக் கட்ட விசாரணைக்கு, மூன்று நீதிபதிகள் கொண்ட பெஞ்சுக்கு வந்தது.

2009 ஜூலை 3] [திரு. துரைமுருகன்]

அன்றைக்கு வழக்கு வந்தபோது, கேரள நீர்ப்பாசனப் பாதுகாப்புச் சட்டம், செல்லத்தக்கதல்ல என்று தமிழக அரசின் சார்பில் வாதிட்டோம். நம்முடைய வாதம் முடிந்துவிட்டது. அவர்களுடைய final argument-ம் முடிந்துவிட்டது. தீர்ப்புச் சொல்கிற நேரத்தில், நம்முடைய போதாத காலம், அதிலே ஒரு நீதிபதி ஓய்வு பெற்றுவிட்டார். எனவே, மறுபடியும் வேறு ஒரு நீதிபதியைப் போட்டு, இந்த மாதம் இதற்குத் தீர்ப்பு வழங்கவிருக்கிறார்கள். தீர்ப்புரைக்கிற இந்த நிலையிலே, மறுபடியும் தமிழ்நாட்டிற்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்துவிட்டால் என்ன பண்ணுவது என்ற ஒரு பயத்தில், கேரளாவைச் சேர்ந்தவர்கள் இப்பொழுது என்ன செய்கிறார்கள் என்று கேட்டால், "இந்த அணை வேண்டாம்; ஒரு புதிய அணை கட்டலாம்" என்று சொல்கிறார்கள். நான் இந்த அவைக்குச் சொல்கிறேன், இந்தப் புதிய அணையைக் கட்டலாம் என்ற வாதத்தை இப்பொழுதுதான் எடுத்து வைக்கிறார்கள். இதற்கு முன்னால், இந்தச் சட்டத்தை எதிர்த்து முதலில் வழக்கு நடந்ததே, 136 அடி தண்ணீர் நிறுத்தலாமா, 142 அடி தண்ணீர் நிறுத்தலாமா என்று; அப்பொழுது புதிய அணை பற்றிக் கேட்கவில்லை. அதற்குப் பிறகு இப்பொழுது தீர்ப்பு வரும் என்ற ஒரு நிலைமையைப் பார்த்த பிறகு, புதிய அணை கட்டுகிற இந்த நிலைப்பாட்டை கேரள அரசு எடுத்திருக்கிறது. எனவே, அந்த நிலைப்பாட்டைத்தான் இப்பொழுது அவர்கள் சொல்லப் போகிறார்கள். அவர்கள் யாரிடத்தில் வேண்டுமானாலும் சொல்லட்டும். இன்னும் சொல்லப்போனால், Tunnel-ல் seepage அதிகமாக இருக்கிறதென்று சொன்னார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், "Seepage அதிகமாக இருக்கிறதென்று சொல்கிறீர்கள், அது நியாயம்தான்; நான் ஒத்துக்கொள்கிறேன். ஒன்று செய்யுங்கள், இதை யார் சொன்னது, உங்கள் Engineers சொன்னார்கள். எங்கள் Engineers-ஐயும் அழைத்துக் கொண்டு செல்லுங்கள், நம்முடைய Engineers-ஐயும் அனுப்புவோம். உள்ளபடியே seepage இருந்தால், அதைக் கட்டுப்படுத்தலாம், அல்லது என்ன செய்யலாம் என்று பார்க்கலாம்" என்றார்கள். "நீங்கள் யாரும் வரக்கூடாது, நாங்கள் மட்டும்தான் போய்ப் பார்ப்போம்" என்று அவர்கள் சொன்னார்கள். நான் இந்த மன்றத்திலே சொல்கிறேன், மற்ற அணைகளிலே வருகிற seepage-விட பெரியாறு அணையிலே seepage குறைவு என்பதை 100 தரம் நிரூபிப்பதற்குத் தமிழக அரசு தயாராக இருக்கிறது. ஆகவே, அவர்கள் எதை வேண்டுமானாலும், ஒரு நாளைக்கு ஒன்று என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். இங்கே உறுப்பினர்கள் சொன்னார்கள் கேரள அரசில் காங்கிரஸ் இருந்தது என்று. அது உமன் சாண்டியா, அச்சுதானந்தனா என்பதல்ல

[திரு. துரைமுருகன்] [2009 ஜூலை 3

பிரச்சினை. அது கேரள அரசுதான், whoever may be there. அதைச் செய்தது காங்கிரஸ்தான் என்று நம்முடைய இடது கம்யூனிஸ்டு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் சொன்னார்கள். அங்கே நாங்கள் கூட்டணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டை மட்டும் சொல்லக்கூடாது என்று சொன்னார். அங்கே கூட்டணி, அதேபோல காங்கிரஸை மட்டும் சொல்லக்கூடாது. இதை மத்திய அரசுதான் முடிவு செய்ய வேண்டும். ஆகையால், இந்த நிலையில் என்ன செய்வது?

முற்பகல் 11-50

இந்த நிலையில் என்ன செய்வது என்று கேட்டீர்கள் என்றால், கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்—அவர்கள் போய்ப் பார்த்ததை நாம் எப்படிப் போய் பார்ப்பது? அவர்கள் எப்படிப் போய் இருக்கிறார்கள் என்றால் அங்கேயுள்ள அந்த முதலமைச்சர், Irrigation Minister இரண்டு பேரும் போய் இருக்கிறார்கள். நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், "இல்லை, இல்லை, நாம் எல்லோரும் ஒன்றாகப் போகலாம்" என்று சொன்னார்கள். அப்படி சொல்வதற்குள்ளாகவே பிரச்சினை வந்துவிட்டது. நான், இப்போதும் இந்த அவையிலே சொல்கிறேன். அனைத்துக் கட்சிகளின் சார்பில் இந்த மன்றத்தில் இருப்பவர்களை மதிப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. இதற்கு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் உறுதி தருவார்களா? எல்லோரையும் நாங்கள் அழைத்துக்கொண்டு போவதற்குத் தயார். பிரதம மந்திரியிடம் நாம் ஒட்டுமொத்தமாக செல்வதற்குத் தயார். இதில் நமக்குள்ளே மித்ரபேதம் வந்துவிடுகிறது; "நாளைக்கு நாங்கள் வர மாட்டோம், எங்கள் அம்மா சொன்னார்கள்" என்று. கூடுமானவரையில் இங்கு இந்த Inter-State பிரச்சினையில் நமக்குள் இருக்கின்ற பேதங்களைக் காட்டக்கூடாது என்று நினைக்கிறவன் நான்.

இந்த அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை; என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று இங்கு கேட்டார்கள். இந்த வழக்கில் எத்தனை முறை முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்றால், நம்முடைய கலைஞர் அவர்கள் ஏழு முறை பிரதம மந்திரிக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். கேரளாவினுடைய முதலமைச்சர் அவர்களுக்கு எத்தனை முறை கடிதம் எழுதியிருக்கிறார் தெரியுமா? 20 முறை கடிதங்களை எழுதியிருக்கிறார். (குறுக்கீடு) உங்களைப் பற்றியும் சொல்கிறேன். அவர்கள் சொல்கிறார்களே என்று நான் சொன்னால் நீயா நானா என்று பேச்சு வரும். அந்த ஆட்சியில்

2009 ஜூலை 3] [திரு. துரைமுருகன்]

அம்மா அவர்கள் எப்போது கடிதம் எழுதியிருக்கிறார், தெரியுமா? இரண்டு கடிதங்களை எழுதியிருக்கிறார்கள். 11-9-2001 அன்று திரு. ஏ.கே. அந்தோனி அவர்களுக்கு ஒரு கடிதம், 27-12-2002 அன்று திரு. ஏ.கே. அந்தோனி அவர்களுக்கு ஒரு கடிதம், இதுதவிர எந்த விதமான கடிதப் போக்குவரத்தும் கிடையாது. பேச்சுவார்த்தைமூலம் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கலாம் என்று திரு. சி. கோவிந்தசாமி சொன்னார். பேச்சுவார்த்தையினைப் பொறுத்தவரையில் கலைஞர் அவர்கள் 29-11-2006-ல் Union Minister திரு. தாக்கூர் முன்னிலையில் பேசினார், 24-2-2007-ல் திரு. சைபுதீன் ஸோஸ் அவர்களுடன் கலைஞர் பேசினார். 13-10-1998 திருவனந்தபுரத்திற்கு என்னை அனுப்பிப் பேச வைத்தார். முதலமைச்சர் கலைஞர் அவர்களே திருவனந்தபுரத்திற்கு வந்து 5-4-2000-ல் அன்றைக்கு இருந்த முதல்வர் திரு. நாயனார் அவர்களுடன் பேசினார். மறுபடியும், 13-2-2003-ல் பேசப்பட்டது. ஆகையினால், பேச்சுவார்த்தைக்கு கலைஞர் அரசு சளைக்கக்கூடியது அல்ல. அண்டை மாநிலத்தோடு பகையை வளர்த்துக்கொள்ளவேண்டுமென்று இந்த அரசு கருதவில்லை. காரணம், ஒதுங்கிப்போயாவது பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று இந்த அரசு கருதுகிறதே தவிர, உரசிப் பார்க்க வேண்டுமென்று அல்ல. உறவினை மதிக்கிறோம். ஆனால், உரிமையை இந்த அரசு எந்தக் காலத்திலும் விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்காது.

எனவே, நமக்கு இப்போது இந்தப் பிரச்சினையில், நீங்களா-நானா என்று பேசுவதைவிட, இதில் எப்படி முடிவெடுத்து தமிழ் மக்களைக் காப்பது என்பதிலேதான் நாம் ஈடுபட வேண்டும். கேரளாவில் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இந்தப் பிரச்சினையில் அடித்துக்கொள்வதில்லை. கர்நாடகாவில் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், பீற்றிக் கொள்வதில்லை. அவர்களுக்கு அது மாநிலப் பிரச்சினை. ஆகவே, தயவுசெய்து சொல்கிறேன், நீங்களா-நானா என்றில்லாமல்—அப்படிப் பேசுவது என்றால், அதற்கு தனி debate வைத்துக்கொள்ளலாம். அது நமக்குள்ளேயே போய்விடும்—ஆகவே, இந்தப் பிரச்சினையில் ஒட்டுமொத்தமாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்படி பிரதம மந்திரியைச் சந்திப்பது என்று ஆணையிடுகிறார்களோ, அந்த ஆணையை ஏற்று, நடப்பதற்கு நானும் தயாராக இருக்கிறேன். இந்த அவையிலேயிருக்கின்ற எதிர்க்கட்சியைச் சார்ந்த பெருமக்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. துரைமுருகன்] [2009 ஜூலை 3

நாம் ஒவ்வொரு முறையும் இதில் நியாயத்தினை நிலைநாட்டுகின்றபோதெல்லாம், கேரள அரசு வேறு மாதிரியான ஒரு நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டிருக்கிறது. காரணம், உள்ளபடியே அணை பலஹீனமாக இல்லை. திரு. சிவபுண்ணியம்கூடச் சொன்னார். அங்கு கீழே கட்டுகிற இடுக்கி அணையின் கொள்ளளவு 75 டி.எம்.சி. அடி. பெரியாறு அணையின் கொள்ளளவு 13 டி.எம்.சி. அடி. இது உடைந்துபோய்விடும் என்கிறார்கள். அப்படி உடைந்துபோனால்கூட, அந்த 75 டி.எம்.சி. அடியில் போய் ஒரு மூலையில்தான் இந்த 13 டி.எம்.சி. அடி தண்ணீர் நிற்கும். 5 ஜில்லாக்கள் போய்விடும், 10 ஜில்லாக்கள் போய்விடும் என்று சொல்வதெல்லாம் புரளி, அரசியலைத் தவிர வேறு அல்ல என்று கூறி, இந்த விளக்கத்தை அளித்திருக்கிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No time. (குறுக்கீடுகள்) நிறைய உறுப்பினர்கள் மானியக் கோரிக்கையில் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடுகள்) Kindly cooperate with me. (குறுக்கீடுகள்) அடுத்து குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) No question of Point of order. Hon. Minister has given a clear reply. Sit down.

குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) மற்ற பிரச்சினைகளை எல்லாம் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. கி. ஆறுமுகம். (குறுக்கீடுகள்) No time, please sit down. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. மணி, very sorry. We have no time. (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள்.